©
GOVERNMENT OF TAMIL NADU
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[Price: Rs. 1.60 Paise

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 18] CHENNAI, WEDNESDAY, MAY 13, 2009
Chithirai 30, Thiruvalluvar Aandu–2040

## Part VI—Section 1

**Notifications of interest to the General Public issued by Heads of Departments, Etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

| | Pages. |
|---|---|
| GENERAL NOTIFICATIONS | |
| இந்திய புதைபொருள் சட்டம்—புதைபொருள் அறிவிப்புகள் .. .. .. | 158-159 |

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

GENERAL NOTIFICATIONS

**புதைபொருள் அறிவிப்புகள்**

**(இந்திய புதைபொருள் சட்டம் 1878–ன் பிரிவு 4–ன்படி அறிவிப்பு)**

*(ந.க. எண் 55185/07/ஆர்4.)*

No. VI(1)/144/2009.

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தாளையுத்து கிராமம் புல எண் **326–ல் 14–10–2007** மற்றும் **15–10–2007–ல்** அருங்காட்சியக காப்பாட்சியர் திரு. எ. பெரியசாமி, தொல்பொருள் ஆய்வாளர், திரு. நாராயணமூர்த்தி, கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆய்வாளர், திரு. கே. மணிவண்ணன், ஆராய்ச்சி மாணவர், திரு. பி. கன்னிமுத்து மற்றும் வாழிய உலக நற்பணி மன்ற தலைவர் ஞானசேகரன் ஆகியோர் கள ஆய்வுப்பணிகள் மேற்கொண்டபொழுது அவற்றில் கீழே கண்டுள்ள புதைபொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன:–

| *வ.எண்* | *புதைபொருள்* | *எண்ணிக்கை* | *அருங்காட்சியக காப்பாளரின் குறிப்பு.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | கல்லாலான செக்குகள் | 2 | (1) 75 செ.மீ. விட்டமும் மற்றும் 210 செ.மீ. சுற்றளவும் கொண்டது. கி.பி. 9ஆம் நூற்றாண்டை சேர்ந்தது.<br>(2) 85 செ.மீ. விட்டமும் மற்றும் 272 செ.மீ. சுற்றளவும் கொண்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. |
| 2 | நடுகல் | 1 | 156 செ.மீ. உயரமும் மற்றும் 69 செ.மீ. அகலமும் கொண்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. |
| 3 | அய்யனார் சிலை | 1 | 90 செ.மீ. உயரமும் மற்றும் 90 செ.மீ. அகலமும் கொண்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. |
| 4 | வீரன் சிலை | 1 | 63 செ.மீ. உயரமும் மற்றும் 53 செ.மீ. அகலமும் கொண்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. |
| 5 | உடைந்த துண்டுக் கல்வெட்டு | 1 | கி.பி. 12ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. |
| 6 | சின்னங்கள் பொறிக்கப்பட்ட பலகைக்கல் | 1 | 5 அடி உயரமும் 2½ அடி அகலமும் கொண்டது. கி.பி. 10ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. |
| 7 | பானை ஓடுகள் | – | 2000 வருடங்களுக்கு முற்பட்டது. |

மேற்கண்ட புதைபொருள் தொடர்பாக புதையல்மீது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ உரிமைகோரும் அனைவரும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முன்பாக நேரிலோ அல்லது தன்னால் முறைப்படி நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மூலமாகவோ ஆஜராகி உரிமை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி உரிமை கோரல் தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முன்பாக **27–04–2009** அன்று நேரிலோ அல்லது தன்னால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மூலமாகவோ தங்கள் உரிமை தொடர்பான ஆதாரங்களுடன் நேரில் விசாரணைக்கு ஆஜராகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதைபொருள் சட்டம் பிரிவு **9–ன்படி** மேற்படி புதையல் தொடர்பாக உரிமை எவரும் கோரவில்லை என்றோ அல்லது கோரப்பட்ட உரிமை தக்க ஆதாரமின்மையால் நிராகரிக்கப்பட்டாலோ கண்டெடுக்கப்பட்ட புதைபொருள் உரிமையற்றது (Ownerless) என முடிவு செய்து ஆணையிடப்படும்.

திண்டுக்கல்,
**2009 ஏப்ரல் 15.**

**இரா. கிர்லோஷ்குமார்,**
*மாவட்ட ஆட்சியர்.*

**(இந்திய புதைபொருள் சட்டம் 1878–ன் பிரிவு 4–ன்படி அறிவிப்பு)**

*(ந.க. எண் 88381/06/ஆர்4.)*

No. VI(1)/154/2009.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், பிள்ளையார்நத்தம் கிராமத்தில் புல எண் 691/1–ல் காலியிடத்தில் நாடக மேடை கட்டும் பணிக்காக 17–12–2006 அன்று பிற்பகல் சுமார் 3.30 மணியளவில் வாணம் தோண்டும்பொழுது கடப்பாரையின் முனைப்பகுதி பட்டு சேதமடைந்த நிலையில் சிறிய மண் கலயம் காணப்பட்டது. மேற்படி மண் கலயத்தில் கீழே கண்டுள்ள புதைபொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன:–

| *வ.எண்* | *புதைபொருள்* | *எண்ணிக்கை* | *எடை* | *அருங்காட்சியக காப்பாளரின் குறிப்பு.* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | சிறிய பொட்டு அளவிலான காசுகள் | 726 | 257.25 கிராம் | தங்கம், வெள்ளி, செம்பு, துத்தநாக கலவை |
| 2 | பொட்டு (அனுமன் உருவம் பதித்தது) நாணயம் | 1 | 3.400 கிராம் | தங்கத்தாலானது கிழக்கிந்திய கம்பெனியால் வெளியிடப்பட்டது. |
| 3 | (அ) தாலிக்கொடி 36.5 செ.மீ. நீளம் | 1 | 10.300 கிராம் | தங்கத்தாலானது |
| | (ஆ) தாலிக்கொடி 40.0 செ.மீ. நீளம் | 1 | 5.930 கிராம் | தங்கம் மற்றும் வெள்ளி, செம்புக் கலவை (10 முதல் 12 காரட்) |
| | (இ) தாலிக்கொடி 39.0 செ.மீ. நீளம் | 1 | 3.370 கிராம் | தங்கம் மற்றும் வெள்ளி, செம்புக் கலவை (10 முதல் 12 காரட்) |
| 4 | குண்டலம் (காதுவாரி) | 2 ஜோடி | 6.600 கிராம் | தங்கத்தாலானது (10 முதல் 12 காரட்) |
| 5 | கொம்பு என்ற புல்லாக்கு | 1 | 982 மில்லி கிராம் | தங்கத்தாலானது (10 முதல் 12 காரட்) |
| 6 | மெட்டி வளையம் (தடை மோதிரம்) | 4 | 15.870 கிராம் | தங்கத்தாலானது (சுமார் 22 காரட்) |
| 7 | கருகுமணி (காதுவாளி) | 7 | 4.750 கிராம் | தங்கத்தாலானது (10 முதல் 12 காரட்) |
| 8 | சங்குச்சக்கரம் (காதுவாளி) | 6 | 10.030 கிராம் | தங்கத்தாலானது (10 முதல் 12 காரட்) |

மேற்கண்ட புதைபொருள் தொடர்பாக புதையல்மீது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ உரிமை கோரும் அனைவரும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முன்பாக நேரிலோ அல்லது தன்னால் முறைப்படி நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மூலமாகவோ ஆஜராகி உரிமை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி உரிமை கோரல் தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) முன்பாக 17–03–2009 அன்று நேரிலோ அல்லது தன்னால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி மூலமாகவோ தங்கள் உரிமை தொடர்பான ஆதாரங்களுடன் நேரில் விசாரணைக்கு ஆஜராகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதைபொருள் சட்டம் பிரிவு 9–ன்படி மேற்படி புதையல் தொடர்பாக உரிமை எவரும் கோரவில்லை என்றோ அல்லது கோரப்பட்ட உரிமை தக்க ஆதாரமின்மையால் நிராகரிக்கப்பட்டாலோ கண்டெடுக்கப்பட்ட புதைபொருள் உரிமையற்றது (Ownerless) என முடிவு செய்து ஆணையிடப்படும்.

திண்டுக்கல்,
2009 பிப்ரவரி 26.

**இரா. கிர்லோஷ்குமார்,**
*மாவட்ட ஆட்சியர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU